**என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட் - 2021**

**1.1 அபிப்பிராயம்**

என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டட்டின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செயற்திட்டத்தை மறுசீரமைப்பதற்காக முன்னணி முகாமையாளராக கம்பனி நியமிக்கப்பட்டது. இது தொடர்பாக திறைசேரியிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 246,939,587 ஆக காணப்பட்டதுடன் அத்தகைய மீதியில் 2021 இன் இறுதியில் உள்ளவாறு ரூபா 88,939,587 தொகை நிலுவையாக உள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது. இதுவரை பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். சமீபத்திய கோரிக்கையானது 2022.05.27 இல் அனுப்பப்பட்டது. | கம்பனி திறைசேரியிலிருந்து பெறவேண்டிய தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கம்பனியின் தேறியலாபம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 608 மில்லியனிலிருந்து 2021 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 602 மில்லியன் அல்லது 99.01 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போதுஇலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியில் உள்ள நிதிக் கருவிகளில் இருந்து ரூபா 1,087 மில்லியன் அல்லது 230 சதவீதத்தால் தேறிய நட்டம் ஏற்பட்டமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைதல் சதவீதத்துடன் மதிப்பிடப்பட்டு காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாடு சாதகமானது/ (பாதகமானது) (ரூபா) | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | (58,474,269) | (3.9) | 2021 ஆம் ஆண்டில் சில உயர் கூப்பன் பிணைமுறிகளின் முதிர்வு. |
| வட்டி செலவினம் | (98,319,993) | (10) | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் மீதான வட்டி குறைவடைதல். |
| கட்டண வருமானம் | (3,096,655) | (5.87) | 2021 ஆம் ஆண்டில் நம்பிக்கைப்பொறுப்பாளர் உடன்படிக்கை பூர்த்தி செய்யப்பட்டமை. |
| தேறிய வர்த்தக ஆதாயம்/ (நட்டம்) | (1,087,037,762) | (230.47) | 2021 ஆம் ஆண்டில் சந்தை வட்டி விகிதங்களின் அதிகரிப்பு. எனவே, போர்ட்போலியோவின் சராசரி சந்தை வருமானம் ஆண்டின் தொடக்கத்தில் 5.62% இலிருந்து ஆண்டு இறுதியில் 9.27% வரை 365 bps ஆல் அதிகரித்துள்ளது. |
| ஆளணிக் கிரயம் | 10,803,121 | 38.15 | நிரந்தர பதவியணியினரிற்கு சராசரியாக 15.5% சம்பளம் திருத்தம், ஏற்கனவே உள்ள பதவியணியினரிற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டமை மற்றும் 2021 ஆம் ஆண்டில் நான்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தமை. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

துறை விகிதங்களுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கம்பனியின் முக்கிய சில கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | துறை | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2021 | 2020 | 2021 | 2020 |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (%) | -3.2 | 30.5 | 0.17 | 16.96 |
| சொத்து மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | -0.7 | 7.6 | -0.13 | 5.48 |
| இடர் நிறையிடப்பட்ட மூலதன போதுமை விகிதம் (ஆர்டபிள்யூசீஏஆர்) (%) (ஆகக்குறைந்தது 10%) | 42.8 | 27 | 22.36 | 35.01 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி ஊழியர்களுக்கான பதவியின் தன்மை, பொறுப்புக்கள் மற்றும் உரிமைகள், கல்வி மற்றும் தொழில்முறை தகைமைகள், ஆட்சேர்ப்பு முறை போன்றவற்றை உள்ளடக்குகின்ற ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) ஒன்றை கொண்டிருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்புக்கான அனைத்து வெற்றிடங்களும் நிரந்தரமாக இருந்தாலும் சரி அல்லது ஒப்பந்தப் பதவிநிலைகளுக்காக இருந்தாலும் சரி, ஆட்சேர்ப்பு இரண்டாம்தர அடிப்படையில் வங்கி பதவியணியினரை பயன்படுத்தி நிரப்பப்பட்டால் வங்கியின் மனிதவள அபிவிருத்தி பிரிவு (HRD பிரிவு) மூலம் செயன்முறைப்படுத்தப்பட வேண்டியதுடன் அது NSB FMC இன் பணிப்பாளர் சபையால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.<br><br>புதிய ஆட்சேர்ப்புக்கான அனைத்து வெற்றிடங்களும் நிரந்தரமாக இருந்தாலும் சரி அல்லது ஒப்பந்தப் பதவிநிலைகளுக்காக இருந்தாலும் சரி, NSB FMC இற்கு நேரடியாக ஆட்சேர்ப்பு இடம்பெற்றால், NSB FMC இன் BHRRC மூலம் செயன்முறைப்படுத்தப்பட வேண்டும்.<br><br>ஆட்சேர்ப்புத் திட்டம் NSB FMC மனிதவளக் கொள்கையில் (பக்கம் இல. 04) சேர்க்கப்பட்டுள்ளது, இது ஏற்கனவே NSB FMC இன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. | ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் பதவி உயர்வுகள், தகைமைகள், அனுபவம் போன்றவற்றை உள்ளடக்கிய முறையான ஆட்சேர்ப்புத் திட்டத்தை (SOR) கம்பனி உடனடியாகத் தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் காணப்படவில்லை. | NSB FMC ஆனது HR செயற்பாடுகளைச் செய்வதற்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளும். | மனித வளப் பணிகளுக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல். |
| (இ) | கம்பனி அதனது செயற்பாடுகளை முன், நடுத்தர மற்றும் பின் அலுவலகத்தின் கீழ் மேற்கொள்ளுகின்ற போதிலும் நிதி செயற்பாடுகளை சரியான கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்களுடன் தனியான நிதி பிரிவு காணப்படவில்லை. | கணக்காளர் (திருமதி.எச்.என்.ஓ.எம்.சோமசிறீ) மற்றும் முதலீட்டு உதவியாளர்-III (திருமதி.ஏ.ஏ.கே.வீரசேகர) ஏற்கனவே NSB FMC இன் நிதிச் செயற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பணிப்பாளர் சபை 2022/10/12 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில், இலங்கை சேமிப்பு வங்கியில் இருந்து | நிதிச் செயற்பாடுகளை செயற்திறனாக செய்வதற்கு தனியான நிதிப் பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இரண்டாம்தர அடிப்படையில் NSB FMC இற்கு ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கு அங்கீகாரம் அளித்தது, அதில் ஒரு ஊழியர் NSB FMC இன் நிதிச் செயற்பாடுகளை செய்ய உள்ளார். | |
| (ஈ) | 2020-2021 காலப்பகுதியில் கம்பனி 07 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்தமையும், 2021-2022 காலப்பகுதியில் அந்த ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களில் 06 ஊழியர்கள் (85 சதவீதம்) கம்பனியிலிருந்து பதவி விலகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.<br>கம்பனியின் உயர் பதவியணியினர் புரள்வை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குடியகல்வு, சம்பள நிலை மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக ஊழியர்கள் NSB FMC இலிருந்து பதவி விலகியுள்ளனர்.<br>அதன் பிரகாரம் வெற்றிடமாக உள்ள பதவிநிலைகளுக்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு NSB FMC நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், கம்பனி ஊழியர் புரள்வை நிவர்த்தி செய்யும் வகையில் பதவியணியினரின் சம்பள நிலைகளை திருத்தியுள்ளது. | பதவியணியினர் புரள்வு விகிதம் குறைக்கப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியின் முகாமைத்துவக் குழு வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தை கொண்டிருப்பதால் கம்பனியின் முகாமைத்துவக் குழுவை NSB சபையின் மூலம் முறைப்படுத்துமாறு கம்பனியின் பணிப்பாளர் சபை CEO இற்கு அறிவுறுத்தியிருந்தது.<br>அதன்பின், கம்பனியின் CEO மேற்படி விடயத்திற்கு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சபைச் செயலாளர் - NSB இற்கு 2021 மார்ச் 08 ஆம் திகதிய உள்ளக குறிப்பை அனுப்பியுள்ளார், மேலும், NSB இன் பணிப்பாளர் சபை 2021 மார்ச் 30 இல் 108/2021 ஆம் இலக்க சபை பத்திரம் தொடர்பாக வேறு சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளது. எனினும், NSB இன் சிரேஷ்ட அதிகாரிகளை நியமித்து, மீளாய்வாண்டுக்கான முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | NSB FMC உடனடியாக முகாமைத்துவக் குழுவை முறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யும். | முகாமைத்துவக் குழுக்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | NSB திறைசேரி பின் அலுவலகத்திற்கு 03 மாதங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் | • திரு. பியூமால் திஸாநாயக்க NSB FMC இல் 2021/11/11 இல் ”பயிற்சியாளராக” இணைந்தார். | கம்பனி ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் பதவி |

(முதலீட்டு உதவியாளர் II) கடமைகளை மேவுகை செய்வதற்காக பயிற்சியாளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். எனினும், குறித்த உத்தியோகத்தர் பதவி விலகிய பின்னர் அந்த பயிற்சியாளர் 2022 மே 01 முதல் ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு முதலீட்டு உதவியாளர் II பதவிக்கு நியமிக்கப்பட்டார். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறிய பயிற்சியாளர் 2021 நவம்பர் 11 முதல் 2022 ஏப்ரல் 10 வரை 06 மாதங்களுக்கு பணிக்கமர்த்தப்பட்டார். மேலும் கம்பனியின் CEO ஆல் 2022 யூன் 01 இல் மீள்நியமனம் வழங்கப்பட்டது. எனவே, இந்த உத்தியோகத்தர் 2022 ஏப்ரல் 11 முதல் மே 31 வரையான காலப்பகுதிக்கு சட்டபூர்வ நியமனம் இன்றி பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்.

(ii) 2022 சனவரி 20 இல் NSB இன் பதில் DGM (நிதி, கூட்டுத்தாபன திட்டமிடல் & MIS) இன் கோரிக்கையின் பேரில், NSB திறைசேரி அலுவலகத்திற்கு முதலீட்டு உதவியாளர்-II ஒருவரை விடுவிப்பதற்கும் குறித்த உத்தியோகத்தரின் கடமைகளை மேவுகை செய்வதற்காக பயிற்சியாளர் ஒருவரை பணிக்கமர்த்துவதற்கும் 2022 பெப்ரவரி 01 இல் சமர்ப்பிக்கப்பட்ட சபை பத்திரத்திற்காக கம்பனியின் சபை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. எனினும்,

- NSB FMC இன் பணிப்பாளர் சபை 2022/02/01 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில், திருமதி கயானி செவ்வந்தியை (முதலீட்டு உதவியாளர் III) NSB இன் திறைசேரி பின் அலுவலகத்திற்கு 03 மாத காலத்திற்கு தற்காலிக அடிப்படையில் விடுவிப்பதற்கும், திரு.பியூமால் திஸாநாயக்கவை (பயிற்சியாளர்) சிரேஷ்ட முகாமையாளர் பின் அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்படி உத்தியோகத்தர் - முதலீட்டு உதவியாளர் III இன் கடமைகளை மேவுகை செய்வதற்கு நியமிப்பதற்கும் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.
- பயிற்சிக் காலம் முடிந்தவடைந்தவுடன், சிரேஷ்ட முகாமையாளர் - பின் அலுவலகத்தின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டு, பயிற்சிக் காலத்தின் செயலாற்றலை அடிப்படையாகக் கொணடு 2022.05.01 முதல் NSB FMC இன் முதலீட்டு உதவியாளராக திரு. பியூமால் திஸாநாயக்கவை உள்வாங்குதற்காக CEO - NSB FMC 2022/04/12 ஆம் திகதி பத்திரமொன்றை BHRRC இற்கு பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்துள்ளது.
- 2022/05/19 இல் நடைபெற்ற NSB FMC இன் BHRRC அதன் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தை மதிப்பாய்வு செய்து அதன் பரிந்துரை/ அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைத்துள்ளது.
- BHRRC இன் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை 2022/05/20 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் 2021/11/11 முதல் அமுலுக்கு வரும் வகையில் ”முதலீட்டு உதவியாளராக” திரு பியூமால் திஸாநாயக்கவை உள்வாங்குவதற்கு பரிந்துரைத்தது.
- அதைத் தொடர்ந்து, 2022/05/24 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தில், CEO- NSB FMC, திரு. பியூமால் திஸாநாயக்கா ஆரம்பத்தில் உயர்வுகள், தகைமைகள், அனுபவம் போன்றவற்றை குறித்துரைக்கின்ற முறையான SOR இன் கீழ் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்,

| | | |
|---|---|---|
| இந்த அங்கீகாரத்திற்கு முன்னதாக இந்த பயிற்சியாளர் 2021 நவம்பர் 11 இல் கம்பனிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயிற்சியாளராக கம்பனிக்கு இணைக்கப்பட்டு அவருக்கு வருகைப் படி வழங்கப்பட்டதால் முதலீட்டு உதவியாளர் பதவிக்கு அவரை 2021.11.11 தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கலை விளக்கினார். எனவே, CEO NSB FMC 06 மாத ஒப்பந்த காலத்திற்குகாக 2022.05.01 முதல் ஆரம்பிக்கும் அவரது ஒப்பந்த காலத்தை கருத்தில் கொள்வதற்கு பரிந்துரைத்தார்.<br>• அதன் பிரகாரம் 2022/05/01 முதல் 06 மாத ஒப்பந்த காலத்திற்கு உட்பட்டு NSB FMC இன் முதலீட்டு உதவியாளராக திரு.பியூமால் திஸாநாயக்கவை உள்வாங்குவதற்கு பணிப்பாளர் சபை பரிந்துரைத்து அங்கீகாரம் அளித்தது.<br>• திரு. பியூமால் திசாநாயக்கவின் நியமனக் கடிதம் 2022/05/01 முதல் தொடங்கும் ஆறு மாத ஒப்பந்த காலத்திற்கு உட்பட்டு NSB FMC இன் ''முதலீட்டு உதவியாளராக'' அவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதை அறிவித்து 2022/06/01 இல் வழங்கப்பட்டது. | |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீள்கொள்வனவு மற்றும் தலைகீழ் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான பெறுமதி குறைப்பு தொடர்பான நேரடி வர்த்தகர் பங்கேற்பாளர்களின் கொள்கையானது, அதன் வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 20 ஆம் திகதிய 2019 இன் 01 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்ட வழிகாட்டல்களின் 7.1(iii) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதை பின்பற்றியிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2022 இல் வெளிப்படுத்துவோம். அந்த நேரத்தில் சிக்கல் கண்டறியப்பட்டதால், வரைவு நிதிக்கூற்றுக்கள் 2021 ஐ கணக்காய்விற்கு சமர்ப்பித்தோம், அதில் இதனை நாங்கள் சேர்க்க முடிந்தது. | கம்பனி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது உரிய பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வர்த்தக உடன்படிக்கை தகவல் பதிவேட்டிற்கு (deal tickets) அங்கீகாரம் வழங்கப்படாத சில சந்தர்ப்பங்களும் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு கையேட்டில் வர்த்தக உடன்படிக்கை தகவல் பதிவேட்டு சுருக்கத்தின் முகப்பில் (face of deal ticket contraction) வர்த்தக தொடர்பு இலக்கம் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கம்பனி முன்னர் வகுத்த முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் வசதிக்காக மொபைல் செயலியை அறிமுகப்படுத்துவதற்கு கம்பனி திட்டமிட்டிருந்த போதிலும் அது இன்னும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வாடிக்கையாளர் முகாமைத்துவ முறைமை 2022 இல் செயற்படுத்தப்பட்டதுடன் விருப்பமான வாடிக்கையாளர்கள் ஒன்லைன் தளம் மூலம் சேரலாம். | கம்பனி திட்டமிட்ட செயற்பாடுகளை திட்டமிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) உள்ளக செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கம்பனி 2019 ஆம் ஆண்டளவில் ஒரு புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமையை பெற்றுக்கொள்வதற்கும், 2020 ஆம் ஆண்டளவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவை உருவாக்குவதற்கும் திட்டமிட்டுள்ள போதிலும் கணக்காய்வு திகதியான 2022 யூன் வரையிலும் மேற்படி நோக்கங்களை பூர்த்தி செய்ய முடியவில்லை. | உலகில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, திறைசேரி முறைமை அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட தொழில்நுட்ப ஊழியர்கள் இந்தியாவுக்குத் திரும்பியதுடன் அவர்களின் குழு பல முறை மாற்றப்பட்டுள்ளது. இனால், எதிர்பார்த்த அளவுக்கு அபிவிருத்தி வேகமாக இடம்பெறவில்லை. எனினும், 2022.09.30 தரவை லைவ் முறைமைக்கு (live system) மாற்றியுள்ளோம், மேலும் கோ லைவ் (Go Live) செயன்முறையை 2022 திசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறோம். | புதிய திறைசேரி முகாமைத்துவ முறைமை உடனடியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |